# தொன்போஸ்கோ அன்பு இல்லம் சமூக சேவை நிறுவனம்
## (சிதை பொருள் சேகரிப்போர் நல்வாழ்வுத் திட்டம்)
## ஆண்டறிக்கை 1987-88

கால அலைகள் கடந்துவந்து நம்மை மூன்றாம் ஆண்டெனும் கரை சேர்த்துள்ள நாள் இது. எமது அன்பு இல்ல வரலாற்றில் இன்று ஒரு பொன்னாள். இந்நன்னாளில் தான் சிதைபொருள் சேகரிப்போருக்கென புதுப்பிக்கப்பட்ட புகலிடம் 16, மலையப்பன் தெரு, சென்னையில் திறக்கப்பட்டுள்ளது.

இப்பெருநாளில் சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி திரு. எல்.எம். மெனசஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் நம் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்துள்ளது பெருமைபடத் தக்கதாகும். ஏனெனில் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட இளைஞர்கள் வாழ்வு வளம்பெற விழையும் எம் விடாமுயற்சியின்பால் அவர் கொண்டுள்ள இணையற்ற ஈடுபாடே அவர் வருகைக்குச் சான்றாகும். எங்கள் பணியின் ஒருங்கிணைப்பாளராகத் திகழும் பேரருட் பெருந்தகை வின்சென்ட் துரைராஜ் அடிகளாரை இதயங்கனிய வரவேற்கிறோம். நம்மிடையேயுள்ள சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் திரு. பி. துரை ஐ.பி.எஸ். அவர்களின் வருகை எமது இல்லச் சிறுவர்களுக்கு அவர் அளிக்கும் பாதுகாப்பினை உறுதிப் படுத்தும் அடையாளமாகும். எங்கள் சமூகநல சேவைகளின் பால் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ள சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் காப்புத்துறை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா அவர்களை நன்றிப்பெருக்குடன் வரவேற்கிறோம். இந்த இனிய நிகழ்ச்சியை சிறப்பிக்க வந்துள்ள நண்பர்களையும், நல்லிதயம் கொண்டோரையும், உதவியாளர்களையும் வருக, வருக என வரவேற்கிறோம்.

### முன்னுரை :-

சாலை ஓரங்களிலும் இரயில் நிலையங்களிலும் கேட்பாரற்று அலைந்து சிதைபொருட்களை சேகரித்து வாழும் கைவிடப்பட்ட இளைய தலைமுறையினருக்கு நல்வாழ்வளிக்கும் நோக்கில் உருவானதே தொன்போஸ்கோ அன்பு இல்லமாகும். வாழ்நாளை வீணாக்கும் வாலிபச்சமூகம் திருந்திச் சீர்பெற இவ்வியக்கம் போற்றுதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மூன்றாண்டுகளுக்கு முன் துவங்கப்பட்ட தொன்போஸ்கோ அன்பு இல்லம் ஆதரவற்ற சிறுவர்களை நேர்மையான குடிமக்களாகவும் காரியமிக்க மனிதர்களாகவும் மாற்றும் சீரிய பணியில் ஈடுபட்டு வருகின்றது.

### இரண்டாம் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் :-

கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது இனிய ஈராண்டுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்த தொன்போஸ்கோ அன்பு இல்லம் மூன்றாம் ஆண்டினை நோக்கி அடியெடுத்து வைத்தது. எங்கள் சபையின் ஆசிய கண்ட தலைவர் பேரருட் பெருந்தகை பி.சி. தாமஸ் அடிகளார் வடசென்னை சட்டம் மற்றும் ஒழுங்குத்துறை துணை ஆணையாளர் திரு. காளிமுத்து ஐ.பி.எஸ். அவர்கள், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் திரு. எ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் பேரருட் பெருந்தகை வின்சென்ட் துரைராஜ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்த சென்ற ஆண்டின் நிகழ்ச்சிகள் இன்னும் எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை. அவ்விழாவில், இரயில் நிலையத்தில் அலைந்து திரியும் சிறுவர்கள், சுமைதாங்கும் தொழிலாளர்கள் ஆகியோர் தங்குவதற்கென்று பார்க்டவுனில் புதியதொரு புகலிடம் திறக்கப்பட்டதும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் கடனுதவிகள் அளிக்கப்பட்டதும், இல்லத்து சிறுவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். அதுமுதல், அன்பு இல்லத்தின் பல்வேறு பயனுள்ள பணிகள் நாளுக்கு நாள் வலிவோடும், பொலிவோடும்

## கோடைமுகாம் :-

இவ்வாண்டு தமிழக சமூகநலத்துறையினர் அளித்த உதவியின் மூலம் கோடைமுகாம் நடத்தப்பட்டது. பத்து நாட்கள் நடைபெற்ற இம்முகாமில் நூறு சிதைபொருள் சேகரிப்போரும் இரயில் நிலையச் சிறுவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். பிராட்வே தொன்போஸ்கோ இளைஞர் மன்றத்தினர் மற்றும் பெங்களூர் கிறிஸ்து ஜோதி கல்லூரி சலேசிய சகோதரர்கள் ஆகியோர் துணையுடன் கல்வி மனமகிழ்வு மற்றும் வளர்ச்சிக்கான நிகழ்ச்சிகள் சிறுவர்களுக்காக நடத்தப்பட்டன. இம்முகாமின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், முகாமின் உயிரோட்டமான நிகழ்ச்சிகள் சிறுவர்களை பத்து நாட்களாகத் திரைப்படங்களை மறக்கச்செய்தன. இம்முகாமின் வெற்றிக்குக் காரணமாய் இருந்து, ஊக்குவித்த அனைவருக்கும் குறிப்பாக திரு.யூஜின், திரு.பெர்னோ, திரு.லூயிஸ், திரு.திருஞானம் ஆகியோருக்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## புதிய சலேசிய இல்லக்குழு :-

இ' இவ்வாண்டு சென்னை சிட்டாடலில் இயங்கிவரும் மாநில சலேசியக் குழுவோடு இணைந்த புதியதோர் சலேசியக் குழுவை அன்பு இல்லம் பெற்றுள்ளது. ஆதரவற்ற சிறுவர்களுக்கான சேவையில் அருட்திரு. வின்சென்ட் மாயபிரகாசம் அடிகளாருடன் மேலும் இருவர் இணைந்துள்ளனர். சகோ.கே.ஜே. தாமஸ் உதவி இயக்குநராகவும், பொருளாளராகவும், சகோ.வின்சென்ட் மனோகர் உதவியாளராகவும் பொறுப்பேற்றுள்ளனர். ஏழை இளைஞர்களுக்கான வளர்ச்சிப் பணியில் அவர்கள் நிறைவு காண நான் வாழ்த்துகிறேன்.

## புதிய தொடர்புமைய நிர்மாணம் :-

சிதைபொருள் சேகரிப்போர் மற்றும் ஆதரவற்ற சிறுவர்கள் ஆகியோருடன் நாங்கள் தொடர்பு கொள்ளும் வகையில் வடசென்னையில் மட்டும் ஏழு தொடர்பு மையங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாண்டு, நவ நிர்மாணா நிறுவன சமூக சேவகர்கள் துணையோடு எஸ்பிளனேட் பகுதியில் மேலும் ஒரு தொடர்பு மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதே கல்லூரியைச் சார்ந்த மாணவிகள் துணையோடு எட்டுத் தொடர்பு மையங்களிலும் உள்ள எம் சிறுவர்கள் பற்றிய ஆய்வுநடத்தப்பட்டு அவர்களுக்கு பயனுள்ள வகையில் சேவை செய்திட அச்சிறுவர்களுடைய தேவைகளையும், எண்ணங்களையும் புள்ளிவிவரப் படிப்பின் மூலம் அறிந்து கொண்டுள்ளோம்.

## மருத்துவ வசதி :-

எங்கள் இல்லத்துச் சிறுவர்களுக்கு சிறந்த முறையில் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வகையில், நாங்கள் அண்டிய போதெல்லாம் இன்முகம் காட்டி இலவசச் சிகிச்சையளித்து, ஊக்கமுடன் பொறுப்பான முறையில் மருத்துவச் சேவை புரியும் டாக்டர்.ரெட்டி அவர்களுக்கும் டாக்டர்.பார்த்தசாரதி அவர்களுக்கும், எழும்பூர் கண்மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர்.செல்வராஜ் அவர்களுக்கும், இராயப்பேட்டையைச் சேர்ந்த டாக்டர். செல்வராஜ் அவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கல்விப்பணி :-

1987-88-ம் ஆண்டு எமது அன்பு இல்லத்திற்கு கல்வி வசதியில் மனநிறைவு தரும் ஆண்டாகும். கல்விப்பணியில் ஊக்கமுடன் ஒத்துழைத்தவர்களுக்கும், நல்லுள்ளம் கொண்டோருக்கும் உபகாரிகளுக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம். ஆதரவற்ற சிறுவர்களில் 75 பேரை பல்வேறு பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் கல்வி கற்கும் பொருட்டு அனுப்பியுள்ளோம்.

தொன்போஸ்கோ அன்பு இல்லத்தின் சார்பில் இவ்வாண்டு மேலும் 45 சிறுவர், சிறுமியர் கல்வி கற்று வருகின்றனர். எம் இல்லத்தின் சார்பில் இதுவரை சுமார் இருநூறு சிறுவர், சிறுமியர் பல்வேறு பள்ளிகளிலும், விடுதிகளிலும், அனாதை இல்லங்களிலும், கல்லூரிகளிலும் பயின்று வருகின்றனர். ஆதரவற்ற குடும்பங்களைச் சார்ந்த சிறுவர், சிறுமியர் தொழிற்கல்வி பயில அனுப்பப்பட்டுள்ளனர். சிதைபொருள் சேகரிப்போரில் மூவர், இவ்வாண்டு மோட்டார் இயந்திரங்களை பழுதுபார்க்கும் பயிற்சியில் தனியார் சிறப்புச் சான்றிதழ் பெற்றுத் தேர்ந்துள்ளனர். மேலும் மூவர் பேருந்துகள் ஓட்டுவதற்கான உரிமம் பெற ஓட்டுநர் பயிற்சிப்பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதன்மூலம் சிதைபொருள் சேகரிப்போரும், சாலையோரச் சிறுவர்களும் எங்கள் சீரிய திட்டத்தின்கீழ் பயனடைய முன்வருவார்கள் என்று நம்புகிறோம். இப்பயிற்சித் திட்டங்களை மேலும் விரிவாக்க வேண்டுமென்பதே எங்கள் நோக்கமாகும்.

ஆதரவற்ற சிறுவர்களின் வாழ்க்கை சீர்பட அவர்களுக்குக் கல்வியறிவு புகட்ட டி-பூக்கடை, பார்க்டவுன், சத்தியாநகர் ஆகிய இடங்களில் மாலை நேர வகுப்புகள், அப்பகுதிகளைச் சார்ந்த சாலையோரத்துச் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மையங்களின் வளர்ச்சி கருதி சிறந்த தொண்டாற்றும் பொருட்டு மேலும் ஒரு ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளார். எட்டு தொடர்பு மையங்களில் இரண்டில் சிதைபொருள் சேகரிப்போருக்கு கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது.

<u>திருமணமான சிதைபொருள் சேகரிப்பாளர்கள்:-</u>

சென்ற ஆண்டு துவங்கிய திருமணமானவர்களுக்கான தொன்போஸ்கோ தலைச்சுமை தூக்குவோர் இயக்கம் வலுவடைந்து வருகிறது. சுமைதூக்குவோர் இயக்க உறுப்பினர்கள் நியாயமான ஊதியம் பெறவும், குறைந்த கூலி தரும் நபர்களிடமிருந்து விடுபடவும், இந்த இயக்கத்திற்கு அரசினர் பதிவு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தங்கள் சகோதரத் தொழிலாளர்களுக்கு ஆற்றிய சீரிய பணிக்காக சுமைதூக்குவோர் இயக்கத் தலைவர் திரு.சண்முகம், செயலாளர் திரு.சுந்தர் ஆகியோருக்கும், திரு.மூர்த்தி, திரு.பெருமாள், திரு.ராஜகோபால் ஆகியோருக்கும் எமது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

<u>கூட்டுறவு காகித அங்காடி:-</u>

இந்திய நாட்டில் இது ஒரு துணிகர முயற்சி எனலாம். சிதைபொருள் சேகரிப்போரிடையே ஒரு கூட்டுறவை உருவாக்க வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

சுட்டெரிக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் தமது குருதியை வியர்வையாக்கி உழைத்திடும் சிதைபொருள் சேகரிப்பாளரை, வஞ்சித்து வாழும் இடைத் தரகர்களிடமிருந்து காத்து, அவர்களுக்கு உரிய ஊதியம் கிடைத்திடச் செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நோக்கத்தைச் செயலாக்கிட ஆறு காகித அங்காடிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்வேறு தொழிற்சாலைகளில் சிதைபொருள் சேகரித்திட அவற்றுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

<u>சுற்றுலா:-</u>

எமது சிறுவர்களின் ஆளுந்தன்மை வளரும் பொருட்டு சென்ற நவம்பர் திங்கள் எண்ணூருக்கு மாணவர்களை சுற்றுலா அழைத்துச் சென்றோம். சுமார் இருநூறு ஆதரவற்ற சிறுவர்களும் இதில் பங்குகொண்டனர். சென்னை நகர முன்னாள் காவல் துறை ஆணையர் திரு.தேவாரம் ஐ.பி.எஸ். அவர்களின் உதவியால் பழவேற்காட்டிற்கு எங்கள் மாணவர்கள் சுற்றுலா சென்றனர்.

சுமார் முந்நூறு மாணவர்கள் இச்சுற்றுலாவில் கலந்து கொண்டு அந்நாளை மகிழ்ச்சிகரமான நாளாக மாற்றினர். காவல் துறை அதிகாரிக்கும், உதவி புரிந்த மற்றவர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றிகள்.

திருமணமான சிதைபொருள் சேகரிப்போருக்கு நடத்தப்பட்ட சுற்றுலா நினைவு கொள்ளத்தக்கதாக இருந்தது. சுற்றுலாவும், சுற்றுப்புறச் சூழ்நிலையும் தங்களது குடும்ப வாழ்வின் இன்னல்களை அச்சமின்றி எடுத்துரைக்கவும், கலந்துரையாடித் தீர்வு காணவும், உதவியது.

தொன்போஸ்கோ நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அன்பு இல்ல மாணவர்கள் அனைவரையும் எண்ணூருக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றோம். பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பலநூறு சிறுவர்கள் இச்சுற்றுலாவில் பங்கெடுத்துக் கொண்டு மகிழ்ந்துரையாடி தங்கள் இதயங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

<u>சிறப்பு நிகழ்ச்சிகள்</u>:-

சென்ற ஆண்டு அக்டோபர்த் திங்கள் 13-ம் நாள் அன்பு இல்லத்தின் அனைத்துச் சிறுவர்களின் பிறந்த நாட்கள், <u>குடும்ப நாளாகக் கொண்டாடப்பட்டது</u>. அனைவரும் ஒன்றாகி நெருங்கி, உறவாடிய நாங்கள், ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி நடைபோடுவது குறித்து கலந்துரையாடினோம். தங்களைப் பேணிக் காப்போர் இங்குள்ளனர் என்ற பெருமையைப் புரிந்து கொண்ட ஆதரவற்ற சிறுவர்கள் தங்கள் மனமகிழ்வை நெஞ்சுருகத் தெரிவித்தனர்.
அன்பு இல்லத்தின் சார்பாக இறைமகன் இயேசுவின் பிறப்புவிழா பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது.

- கோடம்பாக்கம் பாத்திமா அன்னை மடத்தினரால் பெண்கள் சீர்திருத்தப் பள்ளியிலும்,
- சாந்தோம் புனித பீட்ஸ் ஆங்கிலோ-இந்தியன் மேநிலைப் பள்ளியினரால், இராயபுரம் சீர்திருத்தப் பள்ளியிலும்,
- பிராட்வே அன்பு இல்ல இசைக் குழுவினரால், துறைமுகம் பகுதி சாலையோரச் சிறுவர்களுக்காகவும்,
- பிராட்வே இளைஞர் குழுவினரால், அபயம் இல்லத்திலும்,
- பிராட்வே புனித சவேரியார் கன்னியர் மடத்தினரால் வரவேற்பு இல்லத்திலும்

கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது.

நமது நேசத்திற்குரிய தமிழக முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் திடீர் மறைவால் அன்பு இல்லத்தில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டங்கள் ரத்து செய்யப்பட்டு விட்டன.

பொங்கல் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்நாளில் சிதைபொருள் சேகரிக்கும் இளைஞர் ஒருவருக்கு அவர்தம் வாழ்வை வளமாக்கிட, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் கடனுதவி அளிக்கப்பட்டது.

1987 ஜனவரி 31ம் நாள். வாழ வழியின்றி வாடியலையும் வறியோருக்கும், வாலிபருக்கும் வாழ்வின் வழிகாட்டியாகத் திகழ்ந்து, சலேசியப் பெருங்குழுவை சமுதாயத்திற்கு அளித்த இளைஞர்களின் தோழர், மிகப் பெருங் கல்விமான் புனித தொன்போஸ்கோவின் நூற்றாண்டு நினைவு நாள் எமது இல்லச் சிறுவர்களால் கொண்டாடப்பட்டது. ஏழைகளுக்கு வாழ்வளித்து அவர்களை உயிரோடும், மனித உணர்வோடும் உலகில் வாழ வைக்கும் நோக்கத்துடன் இந்நாள் கொண்டாடப்பட்டது. இந்நாளில் சிதைபொருள் சேகரிக்கும் இருபது இளைஞர்களுக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் சலேசிய உதவி மாநிலத் தலைவர் அருட்திரு ரொசாரியோ கிருஉக்ணராஜ் அவர்களால் தையல் இயந்திரங்கள் வாங்கவும், <u>மிதிவண்டி ரிக்ஷாக்கள்</u> வாங்கவும், <u>வியாபாரங்கள் தொடங்கவும்</u>, <u>கடன் நிதி உதவி வழங்க</u>ப்பட்டது.

1. 1987-88-ஆம் ஆண்டில் மட்டும் வீட்டைவிட்டு வெளியேறி வந்து நகர்ப்புறமெங்கும் அலைந்து திரிந்த அல்லலுற்ற 30 பேரை மீண்டும் தம் இல்லங்களுக்கு அனுப்பி வைத்தோம்.

2. வாழ்க்கையில் முன்னேறும் பொருட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உதவியுடன் சிதைபொருள் சேகரிப்போர் 30 பேர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டு வாழ்வில் முன்னேற சாலையோரச் சிறுவர்கள் மற்றும் சிதைபொருள் சேகரிப்பாளர்கள் 50 பேருக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் கடனுதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

4. தையற்கலையினை நன்கு கற்றுத் தேர்ந்த சிதைபொருள் சேகரிக்கும் இளைஞர்களுக்கு தையற்கடைகளை அமைத்துக் கொடுத்துள்ளோம்.

5. ஏற்கனவே இயங்கிவரும் நான்கு கூட்டுறவு காசித வங்காடிகளுடன் மேலும் இரண்டு கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

6, மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சகத்தின் உதவியுடன் சிதைபொருள் சேகரிப்பாளருக்கான முதல் கிடங்கு கட்டப்பட்டுள்ளது.

7. வறுமையில் வாடும் ஒரு சிதைபொருள் சேகரிப்பாளர் வசிக்கும் பொருட்டு ஓர் இல்லம் கட்டித் தரப்பட்டுள்ளது.

திட்டங்களும் முனைப்புகளும்:-

எங்கள் சிறுவர்களின் நல்வாழ்வு குறித்து நாங்கள் காணும் கனவுகள் நனவாகும் நாட்கள் நெருங்கி வருகின்றன. அவற்றுள் சில:-

1. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளர் திரு. நிர்மல் அவர்களின் ஊக்கமுடன் தேனாம்பேட்டையில் இயங்கிவரும் கார் மற்றும் ஸ்கூட்டர் பழுதுபார்ப்பு நிலையங்களை மேலும் விரிவாக்குதல்.

2. சிறந்த ஆட்டோமொபைல் இன்ஜினியர் ஒருவரின் தலைமையின் கீழ் வாகன சர்வீஸ் பிரிவு ஆரம்பித்து, எமது இல்லச் சிறுவர்களுக்கு ஓய்வு நேரத்தில் பயிற்சி அளித்தல்.

3. பார்க்டவுன் அன்பு இல்லத்தில் சிறுவர்களுக்கு பாய் முடையும் பயிற்சி அளித்தல்.

4. ஆதரவற்ற இளைஞர் தங்கிடவும், அவர்களை கண்காணித்துப் பேணவும் இரு இடங்களை ஒதுக்கித் தருமாறு அரசினரைக் கோரியுள்ளோம். அவற்றில் ஒன்று ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையின் எதிரேயுள்ள பயன்படுத்தப்படாத சத்துணவுக் கூடமாகும். அதனை எங்களுக்கு அளித்து உதவுமாறு இங்கு வருகை புரிந்துள்ள திரு. மெனசிஸ், ஐ.ஏ.எஸ். அவர்களை தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

5. எண்ணூர் கத்திவாக்கத்தில் பாய்ஸ் டவுன் அமைக்கப்பட வேண்டுமென்பது எங்கள் கனவாகும். அதுபோன்றதோர் அமைதிப் பகுதியில் தங்கள் வாழ்வில் முன்னேற வேண்டுமென்ற முனைப்புள்ள ஆதரவற்ற சிறுவர்களுக்கு ஊக்கமளித்து, ஆக்கப்பூர்வமான திட்டங்களின் மூலம் தங்கள் வாழ்வில் படிப்படியாக முன்னேற போதிய வசதிகள் செய்து வருவதே எங்கள் நோக்கமாகும்.

முடிவுரை:-

கண்ணுக்குத் தெரியாமல் நம்முடனிருந்து உதவி புரியும் வானகத் தந்தைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவரது அருளுதவி தான் எம் சிறுவர்களின் மனதில் ஆழ்ந்த உருமாற்றத்தை செய்து அவர்கள் சமூக எதிரிகளாக மாறாமல் தடுத்து வருகிறது. அரசு அதிகாரிகளுக்கும், சமய நிறுவனத் தலைவர்களுக்கும், நல்லிதயம் கொண்டோருக்கும், உபகாரிகளுக்கும் ஊக்கமளிக்கும்

நண்பர்களுக்கும், எங்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ள அனைவருக்கும் எங்கள் நன்றியைச் சமர்ப்பிக்கிறோம். அன்பு இல்லச் சேவகர்கள் அலுவலர்கள் அனைவருக்கும் தொன்போஸ்கோவின் கொள்கைக்கேற்ற வண்ணம் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு, பற்று இவற்றிற்காக மிக்க நன்றி.

தங்களது இடையறாத பல்வேறு அலுவல்களுக்கிடையே எங்கள் அழைப்பை ஏற்று இங்கு வருகை புரிந்து இந்நிகழ்ச்சியினை சிறப்பித்த திரு. எல். எம். மெனசஸ் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், திரு. பி. துரை ஐ.பி.எஸ். அவர்களுக்கும், திருமதி. எம். பி. நிர்மலா அவர்களுக்கும், பேரருட் பெருந்தகை வின்சென்ட் துரைராஜ் அடிகளாருக்கும் எம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சகத்தின் துணையுடன் எமது புதிய புகலிடம் நிர்மாணிக்கப்பட உறுதுணை புரிந்த ஜெர்மன் குடியரசைச் சார்ந்த கவுன்சல் ஜெனரல் திரு. டாக்டர். குட்டரவீர வோகல் அவர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறோம்.

மற்றும் இங்கு வருகை புரிந்து இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்த ஒவ்வொருவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக.

நன்றி. வணக்கம்.